RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22276

# இயேசு காவியத்தில் விருந்தோம்பல்

**ஜெ. மெரின் ஜெலின்டா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி-627007, தமிழ்நாடு, இந்தியா

# Hospitality in the Epic of Jesus

**J. Merin Jelinda** [a, *]

[a] Department of Tamil, Sarah Tucker College, Tirunelveli-627007, Tamil Nadu, India

* Corresponding Author: jmerinjelinda@gmail.com

Received: 08-10-2022
Revised: 12-11-2022
Accepted: 20-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

The epic is one of the genres of literature. It speaks of the four kinds of affirmations: virtue, wealth, happiness, and home. The Bible contains literary passages that are at the root of the origin of the epics. Christian epics have emerged based on the Bible. If there is a fictional narrative in it rather than highlighting the truth as it is, the truth will find a place in everyone's heart. Realizing this, during the last days of his life, poet Kannadasan created an immortal epic called Jesus Kavyam. The poem highlights the messages of sovereignty and the good news needed for life. Life means living in a friendly relationship with others. A relationshipless life is like a saltless meal. Treating guests is a characteristic of the Tamils. It is a culture to welcome a guest who comes home with a smile on his face. There are two types of treating the guest. Treating without any expectation and doing so with the expectation that the help done will be rewarded again. Kannadasan describes this culture in jesus' epic. God loves hospitality without expectation. That is the special quality.

**Keywords:** God, Bible, Epic, Jesus, Kannadasan

## முன்னுரை

இலக்கிய வகைகளுள் காப்பியம் ஒன்றாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகை உறுதிப்பொருள்களைக் கூறுகின்றது. காப்பியங்கள் தோன்றுவதற்கு ஆணிவேராக அமைந்த இலக்கியப் பகுதிகள் விவிலியத்தில் அமைந்துள்ளது. விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு கிறித்தவக் காப்பியங்கள் தோன்றியிருக்கின்றன. உண்மையை உள்ளவாறு எடுத்தியம்புவதைவிட அதில் கற்பனை கலந்த வருணனை இருந்துவிட்டால் எல்லோர் இதயத்திலும் உண்மை இடம் பிடித்துவிடும். இதை உணர்ந்து தன் வாழ்வில் இறுதி நாட்களில் கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியம் என்னும் இறவாக் காவியம் படைத்துள்ளார். இறைமை செய்திகளையும் வாழ்க்கைக்குத் தேவையான நற்செய்திகளையும் இக்காவியம் எடுத்தியம்புகிறது. வாழ்க்கை என்றாலே மற்றவர்களுடன் நட்புடன் உறவு கொண்டு வாழ்வது எனலாம். உறவில்லா வாழ்க்கை உப்பில்லா உணவுக்குச் சமமாகும். விருந்தினர்களை உபசரித்தல் தமிழர்க்கே உரிய பண்பு. வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரயேற்பது பண்பாடு. விருந்தினரை உபசரிப்பதில் இருவகைக் காணப்படுகின்றது. எந்த எதிர் பார்ப்பு இல்லாமல் உபசரிப்பது மற்றும் செய்த உதவிக்கு திரும்ப பலன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு செய்தல். இந்த பண்பாட்டை இயேசு காப்பியத்தில் கண்ணதாசன் எடுத்துரைக்கின்றார். எதிர்பார்ப்பு அற்ற உபசரிப்பு மேல் தேவன் பிரியப்படுகிறார். அதுவே சிறப்பு வாய்ந்த பண்பு.

விருந்தோம்பல் விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். 'விருந்தோம்பல்' என்பது இல்லம் தேடிவரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும் என்பதை

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

என்று திருக்குறள் எடுத்துரைக்கிறது (Varadharasan, 2004). பண்டைய தமிழர்களின் அடையாளமாகக் கருதப்படுவது விருந்தோம்பல். ஏழ்மையிலும் கூட ஒரு பகுதி தானியத்தைப் பயன்படுத்தாமல் பாதுகாத்து வைத்து, திடீரென்று வரும் வழிப்போக்கர்களுக்கு விருந்து படைத்திடும் பழக்கம் கொண்ட இனம் நமது தமிழினம் அன்பும், பண்பும் நமது வாழ்வியலில் முக்கிய பகுதிகளாக அமைந்ததால் விருந்தோம்பலுக்கு கூட பல இலக்கியப் பாடல்களைப் படைத்துவிட்டு சென்றுள்ளனர். சங்ககால புலவர்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை வெளியே இருக்கச் செய்து தான் மட்டும் தனித்து உண்பது மிகப்பெரிய குற்றச்செயல் என்று நினைத்தனர். ஆறறிவு கொண்ட மனிதன் அன்புடன் வாழ வேண்டும். பிறருக்கு உதவிசெய்து வாழ்க்கையைச் செம்மை செய்ய வேண்டும்.

## சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

சங்ககாலத்தில் விருந்தோம்பல் பெரிதினும் பெரிதாகப் போற்றப்பட்டது. அதனால்தான் பசித்தோர் முகம் பார் என்றார் பட்டினத்தார். வள்ளுவரும்,

"விருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தல் பொருட்டு" என்கிறார் (Varadharasan, 2004).

விருந்தினர்களை உபசரித்தல் தமிழர்க்கே உரிய பண்பு. வீட்டிற்கு வரும் புதிய வரவே விருந்து. விருந்தினர்களிடம் நண்பர்கள் போல உரையாடி அவர்கள் நமக்கு நெருக்கமானவர்கள் என்று உணர வைத்து "ஈன்ற கன்றிடம் காட்டும் பசுவின் அன்பைப்போல்" அவர்களிடம் அன்பைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். பழந்தமிழரின் நாகரீகப் பண்பாட்டுக் கூறுகளில் விருந்தினரைப் பேணுதல் சிறப்பு பெறுகிறது. வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு அவர்கள் முகம் மலரும் வண்ணம் அறுசுவை உணவை சமைத்துக் கொடுத்து தன் அன்பை வெளிக்காட்டுவது தமிழர் பண்பாகும். வசூழ்நிலையில் இருந்தாலும் வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உணவழிப்பது தமிழர் பண்பு. பசித்தோர் உண்டபின் அவர்கள் முகம் மலர்வதைப் பார்த்து இன்பம் அடைவார்கள் என்பதை,

"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்

இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்ததென

குறித்து மாறு எதிர்ப்பை பெறாமையின்

குரல் உனக்கு விதைத்தினை உரல் வாய்ப்பெய்து"

புறநானூறு விளக்குகிறது (Swaminatha Iyer, 1894).

பசித்து வருவோருக்கு உணவு அளிப்பதை உயிர் கொடுத்ததாக கருதுகிறது சங்க இலக்கியம். இதனை, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதை மணிமேகலை விளக்குகிறது (Puliyur Kesigan, 2011).

## இயேசு காவியத்தில் உபசரிக்கும் பண்பு

விருந்தினரை உபசரிக்கும் பண்பு நலன்களைச் சகோதரிகளான மார்த்தாள், மரியாள் பெற்றிருந்தனர். மார்த்தாள், மரியாள் உடன் பிறப்புகள் ஆவர். இயேசு காவியத்தில் இவர்களைப் பற்றிய செய்திகள் உள்ளன. இவர்கள் பெத்தானியாவில் வாழ்ந்தார்கள். இயேசு ஒலிவ மலைக்கு விண்ணப்பம் செய்ய வரும் போதெல்லாம் இவர்கள் வீட்டிற்கு வருவதுண்டு. மார்த்தாள், மரியாள் இருவரும் அவரை

உபசரிக்கும் நல்ல உயர்ந்த பண்புள்ளம் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதை இயேசு காவியம் எடுத்துரைக்கிறது. விருந்தோம்பல் என்பது அவர்களுடைய கலாச்சாரத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை,

"மார்த்தா ளும்ஓர் மாபெரும்பணியில்

பரபரப் போடும் பறந்து திரிந்தனள்

விருந்து படைக்கும் வேலைதான் அஃது"

என்று கண்ணதாசன் எடுத்துரைக்கின்றார் (Kannadasan, 2011).

விருந்தினரைப் பேணுவதில் மார்த்தாள் சிறப்புப்பெற்றவளாய் திகழ்ந்தாள். இயேசுவிற்கு பலமான விருந்து படைத்து அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும் என்பது மார்த்தாளின் ஆசை. இன்றைய சமுதாயத்தில் மார்த்தாளைப் போல உபசரிக்கும் பண்பைப் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## பயனற்ற விருந்தோம்பல்

பரிசேயரின் தலைவன் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தான். விருந்துக்கு யாரெல்லாம் அழைப்புவிடுத்திருந்தான் என்றால் அவன் வசிக்கும் பகுதியில் உள்ள பெரிய மனிதர்களை விருந்துக்கு வரும்படி அழைப்பு விடுத்தான். இயேசுவும் அந்த விருந்தின் அழைப்பை ஏற்றுக் கலந்துக்கொண்டார். சமுதாயத்தில் எளியோர் ஒருவரையும் அவ்விருந்தில் காணவில்லை. கிறித்தவர்களின் பெரிய கோட்பாடுகளில் ஒன்று ஏழைகளுக்கு இரங்க வேண்டும் என்பதை

"பரிசே யர்நீர் விருந்துக் கிந்தப்

பணக்கா ரர்களை அழைக்காதீர்!

சரியாய் அவரும் திருப்பித் தருவார்

சமமா கும்என நினைக்காதீர்!

அறியா ஏழை குருடன் முடவன்

அவரைத் தேடி உணவிடுவீர்!

வருவான் தேவன் உமைத் தேடி

வாசல் திறந்து வழிவிடுவீர்!" என்று கண்ணதாசன் எடுத்துரைக்கின்றார் (Kannadasan, 2011).

பொதுவாக, தங்களுடைய நண்பர்களையும், உறவினர்களையும், செல்வந்தராகிய அயலகத்தாரையும் அழைப்பதையே மனிதர்கள் பழக்கமாகக் கொண்டிருந்தனர். பதிலுக்குப் பதில், தங்களுக்குச் செலுத்தப்படும் என்ற எதிர்ப்பார்ப்போடு இவ்வாறு நடந்துக்கொள்கின்றனர். இப்படி வாழ்வது தெய்வீக வாழ்க்கை அன்று.

"ஏழைகள் விருந்தளிக்குமளவுக்குச் செல்வமற்றவர்கள், ஊனர், சப்பாணி, குருடர் ஆகியோர் பலம் அற்றவர்கள். இவர்கள் யாவரும் விருந்தளிக்கத் தகுதி பெற்றவர்கள். அத்தகையோரை அழைத்தால் அவர்களால் கைமாறு செய்ய முடியாது. எனவே 'அழைப்பு' தன்னலமற்றதாகும். மேலும் தன்னைவிட எளிய நிலையிலுள்ளோருடன் நெருங்கி உறவாடுவதற்கு மனத்தாழ்மை வேண்டும். தன்னலமற்ற அன்பு வேண்டும்." என்று திருமறை விளக்கவுரை எடுத்துரைக்கிறது (Robinson, 1990).

ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும் குருடரையும் அழைத்து அவர்களுக்குத் தயை பாராட்டுவது தான் தெய்வீக இயல்பாகும். இப்படிப்பட்ட எளியோரிடத்தில் அன்பு கூறும் போது தேவனிடமிருந்து மிகச்சிறப்பான வெகுமதியைப் பெறமுடியும்.

## முடிவுரை

சங்க காலம் முதல் இன்று வரை விருந்தோம்பல் போற்றப்பட்டு வருகிறது. கவிஞர் கண்ணதாசனின் இயேசு காவியம் இயேசு தன் வாழ்வில் செய்த நற்செயல்களை உலகிற்குப் பறைசாற்றுவதோடு மனித பண்பாட்டு முறையினைச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கின்றது. ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இன்றி அனைவரையும் ஒருமுகத்தோடு உபசரித்தல் வேண்டும்.ஏழை பணக்காரன் என்ற பாகு பாடு இல்லாமல் உபசரிக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்பாட்டை இயேசு காவியம் வலியுறுத்துகிறது.

## References


Kannadasan, (2011) Yesu Kaaviyam, Kannadasan Padhipagam, Chennai, India.

Puliyur Kesigan, (2011) Manimegalai Moolamum Urayaiyum, Saratha Pathippagam, Chennai, India.

Robinson, G. (1990) Thirumarai Vilakavurai, Tamil Theological Book Club, Chennai, India.

Swaminatha Iyer, U.V. (1894) Puranaanooru Pathippum Uraiyum, U.Ve.Sa. Library, Chennai, India.

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License